**CC.NO.43/2020 PW-6**

நாள் : 22.05.2024

பெயர் : சாந்தி

க/பெ : அசோக்குமார்

**(1ம் எதிரி அஜர், எதிரிகள் 2,,4 ஆஜரில் இல்லை. 2 மற்றும் 4 வது எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது, 3ம் எதிரி காலமாகிவிட்டார்)**

**சாட்சி மனுவின் மீது மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

உங்களுடைய சொந்த ஊர் காவேரிப்பாக்கம் ஐயம்பட்டு என்றால் சரிதான். எத்தனை வருடங்களாக அங்கு வசித்து வருகிறிர்கள் என்றால் திருமணம் ஆன நாளில் இருந்து அங்கு தான் வசித்து வருகிறேன் எவ்வளவு நாட்கள் என்று குறிப்பிட்டு சொல்ல இயலாது. உங்களுக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது.நீங்கள் புளியங்கண்ணுவில் வசித்து வந்துள்ளிர்களா என்றால் நான் அங்கு வசிக்கவில்லை ஆனால் என் உறவினர்கள் அங்கு உள்ளார்கள் அதனால் நான் சென்று தங்கி வருவேன். மேற்சொன்னது போல புளியங்கண்ணுவில் உறவினர் வீட்டுக்கு சென்று வருவிர்கள் என்ற விவரத்தை உங்கள் போலீசார் விசாரணையில் சொன்னிர்களா என்றால் இல்லை. அ.சா.1 புவனேஸ்வரிக்கு நீங்கள் பெரியம்மா என்றால் ஆமாம்.

அ.சா.1 க்கு நீங்கள் பெரியம்மா முறை என்று போலீஸ் விசாரணையில் சொல்லியிருக்கிறிர்களா என்றால் போலீஸ் விசாரிக்கவில்லை. உங்களுடைய முதல் விசாரணையில் பெருமாள் என்பவரும் நீங்களும் இருசக்கர வாகனத்தில் புளியங்கண்ணு சென்றதாக கூறியுள்ளிர்கள் அந்த விவரங்கள் போலீஸ் விசாரணையிலும் கூறியிருக்கிறிர்களா என்றால் ஆமாம். நீங்கள் பொய் சாட்சியம் அளிக்கிறிர்கள் நீங்களும் பெருமாளும் இருசக்கர வானத்தில் புளியங்கண்ணுவுக்கு சென்றதாக போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் அது தவறு. 1ம் எதிரி ஜெய்கணேசசை போலீசார் எங்கு வைத்து கைது செய்தார்கள் என்றால் இராணிப்பேட்டை பேருந்து நிறுத்தம் அருகே அவரிடம் வாக்குமூலம் பெற்று கைது செய்தார்கள். அந்த சமயத்தில் பொது மக்கள் எவ்வளவு பேர் இருந்தார்கள் என்றால் நிறைய பேர் இருந்தார்கள் எவ்ளவு பேர் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. போலீசார் உங்களை தவிர அங்கு இருந்த நபர்கள் யாரையாவது விசாரித்தார்களா என்றால் இல்லை. போலீசார் உங்களை விசாரித்தார்களா என்றால் இல்லை சாட்சி கையொப்பம் மட்டும் பெற்றார்கள். எங்கு வைத்து கையொபப்பம் பெற்றார்கள் என்றால் காவல்நிலையத்தில் வைத்து போட்டேன்.

போலீசார் கையொப்பம் பெற்ற ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்ற விவரம் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியாது எனக்கு படிக்க தெரியாது போலீசார் டைப் செய்த ஆவணத்தை என்னிடம் படித்து காண்பித்து கையொப்பம் பெற்றார்கள். எந்த போலீஸ் ஆவணத்தை டைப் செய்தார் என்றால் லட்சுமி என்ற போலீஸ். உங்களிடம் கையொப்பம் பெற்ற பின்னர் போலீசார் வேறு எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றால் ஆமாம். எந்த தேதியில் போலீசார் எதிரியை கைது செய்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தேதி குறிப்பிட்டு தெரியாது.

போலீசார் நீங்கள் சொல்வது போல் உங்கள் முன்னிலையில் எதிரியை கைது செய்யவில்லை எதிரி ஜெய்கணேசை ஆய்வாளர் சுப்புலட்சமி கைது செய்து காவல்நிலையத்தடில் வைத்து இருந்தார் அப்போது தான் நீங்கள் ஆவணத்தில் கையொப்பம் செய்திர்கள் என்றால் சரியல்ல. உங்களுக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது போலீசார் கேட்டுக்கொண்டதிற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல. நிங்கள் சொல்வது போல் உங்கள் முன்னிலையில் எந்த ஒப்புதல் வாக்குமுலம் பதிவாகவில்லை என்றால் சரியல்ல. உங்களுக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாதா காரணத்டதால் உங்கள் முதல் விசாரணைக்கும் போலீசார் விசாரணைக்கும் முரண்பாடு உள்ளது என்றால் சரியல்ல. அ.சா.1 க்கு உறவினர் என்பதால் நீங்கள் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

Sd/- ********
District Munsif cum Judicial Magistrate,
Ranipet.